மாலை முரசு

## காதலர் இருவரைப் பிரித்த மோட்டார் சைக்கிள் விபத்து

பனாகொட இராணுவ முகாமிற்கு அருகில் லொறி மற்றும் மோட்டார் சைக்கிள் மோதி நேர்ந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் பயணித்த காதலர்கள் விபத்துக்கு உள்ளாகியுள்ளனர். 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆடி 22 திங்கட்கிழமை 07.08.2023 அதிர்வு 07



# '13'ஐ முற்றாக நீக்குங்கள்!

## விமல் வீரவன்ஸ வீம்புப் பிடிவாதம்

கொழும்பு,ஓகஸ்ட்07

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக நீக்கி விடுவதே சிறந்த வழி என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். 04

# சீனக்குடாவில் இன்று பயிற்சி விமானம் விழுந்து நொறுங்கியது

## அதில் இருந்த இருவர் பலி



திருகோணமலை, ஓகஸ்ட் 07

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான பயிற்சி விமானம் ஒன்று புறப்பட்ட சில நிமிடங்களிலேயே விழுந்து நொறுங்கியதில் இருவர் உயிரிழந்துள்ளனர் என இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது. 04





## இலங்கையில் சச்சின்

யுனிசெவ் அமைப்பின் கௌரவ தூதுவராகவும் செயற்படும் இந்தியக் கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். 04

# வடக்குக் கல்வியை ஆளுநர் அரசியல் மயப்படுத்துகிறாராம்

## சீறுகின்றார் ஆசிரியர் சங்கத்தின் ஸ்டாலின் போராட்டம் வெடிக்கும் எனவும் எச்சரிக்கை



வட மாகாணக் கல்வியை அரசியல் மயப்படுத்தும் செயற்பாட்டை, வட மாகாண ஆளுநர் கைவிடாது போனால், தொழிற்சங்க போராட்டம் வெடிக்கும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் எச்சரித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் ஆசிரியர்களைச் சந்தித்த பின்னர் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். 04

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES 235+ CONDO PROJECTS 3500+ CONDO UNITS
KELSEY HOMES
40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
CENTRALPAR JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

# நானாட்டானில் காற்று மின் சக்தி நிலையம்

# எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டம்









மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள நறுவிலிக் குளம் கிராம பகுதியில அமைக்கப் பட்ட 15 மெகா வாட் காற்று மின் சக்தி நிலையத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று அங்கு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

‘இயற்கையோடு இணைந்த நிலை யான வளர்ச்சி திட்டத்தின் கீழ்’ மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள நறுவிலிக்குளம் கிராம பகுதியில் ‘ஹிருரஸ் பவர்’ நிறுவனத்தி னால் அமைக்கப்பட்ட 15 மெகா வாட் காற்று மின் சக்தி நிலையம் நேற்று (06) காலை 11 மணியளவில் மின்சக்தி, மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தலைமையில் வைபவ ரீதி யாக திறந்து வைக்கப்பட்டது.

இதனைக் கண்டித்து நறுவிலிக் குளம் கிராம மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

சுமார் 06 மின் காற்றாலை கோபு ரங்களை கொண்டதாகக் குறித்த காற் றாலை மின்சக்தி நிலையம் வைபவ ரீதி யாகத் திறந்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தெரிவு செய் யப்பட்ட முன்பள்ளி சிறுவர்களுக்கு அமைச்சரினால் பாடசாலை கற்றல் உபகரணம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிலையில் நறுவிலிக்குளம் கிராம மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தில் உள்ள காற்றாலை மின் கோபுரத்தால் தாங்கள் பல்வேறு அசௌ கரியங்களுக்கு முகம் கொடுத்து வரு கின்றனர் என்றும் அவர்கள் தெரிவித் துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள்,



உரிய திணைக்கள அதிகாரிகளுக்கு பல தடவை கோரிக்கை விடுத்தும் எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்க வில்லை என்று அந்த மக்கள் விசனம் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் அதிகமானவர்கள் அருகில் உள்ள கடலை நம்பி வாழ்ந்து வருகின் றனர். இதனால் அவர்களின் கடல் தொழில் நடவடிக்கை பாதிக்கப்படு கிறது என்றும் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக இரவு நேரங்களில் காற்றாலை கோபுரங்களில் இருந்து வெளிவரும் சத்தத்தால் தாங்கள் பல்வேறு இடர்களை சந்திப்பதாகவும், இரவு நேரங்களில் உரிய முறையில் நித்திரை கொள்ள முடியாத நிலை உள்ளதோடு, மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளனர்.

தமது கிராமத்தில் மக்கள் குடியிருப் புக்குள் அமைக்கப்பட்டுள்ள 2 மின் காற்றாலை கோபுரங்கள் உடன் அகற் றப்பட வேண்டும் என்று மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

# வவுனியா சிறையில் கட்டுப்பாடு தளர்வு: கட்டுப்பாட்டுக்குள் வந்தது நோய்பரவல்

வவுனியா, ஓக.07

தொற்றுநோய் நிலைமை காரண மாக வவுனியா சிறைச்சாலையில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டை நீக்கு வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலையில் ஒரு கைதிக்கும் சிறைச்சாலை அதிகாரிக்கும் அம்மை நோய் ஏற்பட்டதால் அதன் பரவலை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, சிறை வளாகத்துக் குள் நடமாட்டக் கட்டுப்பாடுகளை விதிக்க சிறைச்சாலை திணைக்களம் நடவடிக்கை எடுத்தது.

கடந்த மாதம் 25 ஆம் திகதி முதல் இரண்டு வாரங்களுக்கு விதிக்கப் பட்டிருந்த நடமாட்டக் கட்டுப்பாடுகள் இன்றுடன் (07) முடிவடைய உள்ளது என்று வவுனியா பிராந்திய தொற்று நோய் பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது.

அதன்படி நாளை (08) முதல் வழமை போன்று அன்றாட நடவடிக் கைகளை மேற்கொள்ளுமாறு பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவு வவுனியா சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அறி வித்துள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த நாட்டில் உள்ள சிறைச்சாலைகளுக்கு உணவு மற்றும் மருந்து விநியோகத்தில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள் காரணமாக, கைதிகள் கடும் நெருக்கடியில் உள்ளனர் என்றும் கைதிகளின் உரிமைகள் பாதுகாப்புக் குழுவின் பொதுச் செயலாளர் சுதேஷ் நந்திமால், கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட் டுள்ளார்.

# மீனவர் கைதை ஆட்சேபித்து முல்லைத்தீவில் போராட்டம்




குமுழமுனை, தண்ணிமுறிப்பு, ஹிச்சிராபுரம் மீனவர்களைக் கைது செய்தமையைக் கண்டித்தும் அவர்களை விடுவிக்கக் கோரியும் இன்றையதினம் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தண்ணிமுறிப்புகுளத்தில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டவர்களை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த குமுழமுனை தண்ணிமுறிப்பு, ஹிச்சிராபுரம் மீனவர்களை விடுவிக்க கோரி இந்தப் போராட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக இன்று காலை 10.30 மணியளவில் முன்னெடுக்கப்பட்டது.

தண்ணிமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்ட குமுழமுனை தண்ணிமுறிப்பு மக்களுக்கும், ஹிச்சிராபுரம் மக்களுக்குமே அனுமதி உள்ள நிலையில் கஜபாகுபுர , சம்பத்நுவர, ஜனகபுர, கலியாணபுர பகுதியிலிருந்து வந்த பெரும்பான்மையினர் அத்துமீறி கடந்த அன்று மீன்பிடியில் ஈடுபட்டமையைத் தொடர்ந்து மீனவ சங்கத்தினருக்கும், பெரும்பான்மையின மக்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் குளத்தில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 38 சிங்கள மொழிபேசும் மீனவர்களையும் , அவர்கள் மீன்பிடிக்கு பயன்படுத்திய உபகரணங்களையும் குறித்த பகுதி மக்களால் ஒட்டுசுட்டான் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். அந்த சந்தேக நபர்களில் ஒன்பது பேர் பொதுமக்களால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் தப்பி சென்றுள்ளனர்.

இந்நிலையில். பதிவு செய்யப்பட்ட ஹிச்சிராபும், குமுழமுனை தண்ணிமுறிப்பு சங்கத்தினை சேர்ந்த 17 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக பொதுமக்கள், மீனவர் சங்க உறுப்பினர்கள், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், அரசியல் பிரமுகர்கள் என பலரும் இணைந்து போராட்டத்தினை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த போராட்டத்தில் பொலிஸாரிடம் ஒப்படைத்தவர்கள் தப்பி சென்றது எப்படி?, உயிர் போனாலும் உரிமையை விட்டு கொடுக்கோம், தமிழ் தேசத்தில் தமிழருக்கு உரிமை இல்லையா?, எமது வாழ்வாதாரத்தில் கை வைக்காதே, சட்ட பூர்வ தொழிலாளர்களை கைது செய்தது எவ்வாறு, நிறுத்து நிறுத்து பெரும்பான்மையினரின் அத்துமீறலை நிறுத்து, சட்டத்தை மீறி தொழில் செய்வோரை தண்டிக்க யாரும் இல்லையா?, அரச அதிகாரிகளே, தமிழ் பேசும் மீனவர்களின் உடமைகளை நாசமாக்காதே, சட்ட விரோத தொழிலாளருக்கு பொலிஸார் உடந்தையா? – போன்ற பல்வேறு வாசகங்களையுடைய பாதாதைகளை தாங்கியவாறு கோசங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்தின் பின்னர் தமிழ்ப் பேசும் மீனவ சமூகம் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் அடங்கிய மகஜர் வாசித்து காட்டியதன் பின்னர் அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது.

கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு அரசாங்க அதிபர் தொலைபேசியில் தொடர்பை ஏற்படுத்தி பிரச்சினையை கதைத்ததன் பின்னர் நிரந்தர தீர்வினை பெற்றுத்தர முயற்சி செய்வார் எனவும், கோரிக்கைகளை உரிய அதிகாரிகளிடம் தெரிவிப்பார் எனவும் அரச அதிபர் குறிப்பிட்டார்.








# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## வடக்குக் கல்வியை...

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு கல்வி ஆசிரிய இடமாற்றங்களில் இடமாற்றச் சபையின் அறிவுறுத்தல்களை மீறி, ஆளுநர் இடமாற்றங்களை வழங்குகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வட மாகாண கல்வியின் நிர்வாக செயற்பாடுகள் சுதந்திரமாகவும், வினைத்திறனாகவும் நடைபெறுவதற்கு ஆளுநர் இடையூறு ஏற்படுத்தக்கூடாது.

அது மட்டுமல்லாமல், வடக்கில் இடம்பெற்ற ஊழல் முறைகேடுகள் தொடர்பில் விசாரணைகள் இழுத்தடிக்கப்பட்டு, ஊழல்வாதிகள் பாதுகாக்கப்படுகின்றனர்.

மேலும் ஆயிரம் பாடசாலைகளைத் தேசியப் பாடசாலைகளாக்கும் திட்டத்திற்கு சுமார் 2,285 மில்லியன் ஒதுக்கப்பட்ட நிலையில், வடக்கிலும் தேசியப் பாடசாலைகளின் சுவர்களில் எழுதி திறப்பு விழா செய்தார்கள்.

ஆனால், 22 பாடசாலைகள் மட்டும் தேசியப் பாடசாலைகளாக மாற்றம் பெற்ற நிலையில், எஞ்சிய பணத்திற்கு என்ன நடந்தது என்பது எவருக்கும் தெரியாது.

எனவே, வடக்குக் கல்வியை அரசியல் மயமாக்குவதற்கு வடமாகாண ஆளுநருக்கு இடமளிக்க மாட்டோம் என்பதுடன், அவர் தனது செயற்பாடுகளை நிறுத்தாது போனால் எமது தொழிற்சங்கப் போராட்டம் வெடிக்கும். - எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## '13'ஐ முற்றாக...

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில் -

"13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் நாடு பிளவுபடும் என்று நாம் தொடர்ச்சியாக எச்சரிக்கை விடுத்து வருகின்றோம்.

இந்த எச்சரிக்கையை மீறி ஜனாதிபதி செயற்படக்கூடாது.

நாட்டில் தற்போது 13ஆவது திருத்தச் சட்ட விவகாரம் பெரும் பிரச்சினையாக உருவெடுக்கின்றது.

எனவே, அந்தச் சட்டத்தை முற்றாக நீக்கி விடுவதே சிறந்த வழி. வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்காக இந்த நாட்டைப் பிளவுபடுத்த ஒருபோதும் இடமளியோம்" எனத் தெரிவித்துள்ளார்

## இலங்கையில் சச்சின்...

சச்சின் டெண்டுல்கர் சப்பிரகமுவ மாகாணத்தில் உள்ள பாடசாலையொன்றிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். ஆளுநர் நவீன் திசநாயக்கவும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டுள்ளார்.

இலங்கையில் கொரோனா பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக சிறுவர்களிற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்த நிகழ்வில் சச்சின் கலந்துகொள்ளவுள்ளார்.

## சீனக்குடாவில்...

இன்று முற்பகல் 11..27அளவில் திருகோணமலை - சீனக்குடா விமானப்படை தளத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இந்த விமானம் விபத்துக்குள்ளாகியுள்ளதாக விமானப்படை பேச்சாளர் கப்டன் துஷான் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தில் விமான பயிற்சியாளர் மற்றும் விமானி ஒருவர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதானி ராஜபக்ஷ விசேட குழுவொன்றை நியமித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## காதலர் இருவரை...

இந்த விபத்தில் காதலி அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார். காதலன் படுகாயமடைந்து ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என அதுருகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

மாலபேயில் வசிக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவன பிரதிநிதியான கோஷனி அலோக்யா என்ற 25 வயதான யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காதலர்கள் இருவரும் பாதுக்க பிரதேசத்தில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றுவிட்டு கொடகமவில் இருந்து மாலம்பே நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தனர்.

இதன் போது பனாகொட இராணுவ முகாமிற்கு அருகில் உள்ள வீதி திருத்தும் இடத்தில் மோட்டார் சைக்கிள் கவிழ்ந்ததில், முன்னால் வந்த லொறியுடன் மோதி இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து இடம்பெற்றவுடன் இருவரும் அணிந்திருந்த ஹெல்மட்கள் கீழே விழுந்துள்ளன. இதனால் பெண்ணின் தலையில் பலத்த காயம் ஏற்பட்ட நிலையில் அவர் அங்கேயே உயிரிழந்துள்ளார்.

இளைஞனின் வலது கால், வலது கை மற்றும் கால்களில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும், அவரது நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விபத்தில் சிக்கிய இந்த காதலர்கள் இருவரும் எதிர்வரும் ஒரிரு நாளில் நிச்சயதார்த்தம் செய்து கொள்ள எதிர்பார்த்திருந்தனர் எனவும் தெரியவந்துள்ளது.

நிச்சயதார்த்த தேவைக்காக திரும்பி வந்து கொண்டிருந்த வேளையில் விபத்திற்குள்ளாகினர் எனவும் கூறப்படுகிறது.

# பெரியநீலாவணை வாக்காளர்களை பதிவு செய்தல் பற்றிக் கலந்துரையாடல்

(நூருல் ஹுதா உமர் )





பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவு மக்களுடன் அப்பிரதேசத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட கிராம நிலதாரி பிரிவில் வாக்காளர்களை புதிதாக பதிவு செய்வது தொடர்பிலான கலந்துரையாடல் கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி தலைமையில் பெரிய நீலாவனை புலவர்மணி சரிபுதீன் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரிஸ், கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி எ.எம். றக்கிப், பெரியநீலாவணை புலவர்மணி சரிபுதீன் மகா வித்தியாலய அதிபர் எ.எல். அன்சார், சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் சாலி, பள்ளிவாசல் தலைவர், பொதுமக்கள் எனபலரும் கலந்து கொண்டனர்.

பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவு பொதுமக்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும், நிரந்தரமாக பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவில் வாக்காளர்களாக தம்மை பதிவுசெய்து தர நடவடிக்கை எடுக்குமாறும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் இதன்போது கோரிக்கை விடுத்தனர்.

புதிதாக உருவாக்கப்பட்ட அக்கிராம நிலதாரி பிரிவில் வாக்காளர்களை புதிதாக பதிவு செய்வது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு தலைவருடன் பேசி உடனடி நடவடிக்கை எடுப்பதாக மக்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர் இவ்விடயம் தொடர்பில் முன்னடுத்துள்ள நடவடிக்கை தொடர்பிலும் பொதுமக்களுக்கு விளக்கினார்.

# கல்முனை மாநகர சபையில் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட முகப்பு

## மோசடிகளுக்கு இனி இடமில்லை என்கிறார் ஆணையாளர்




(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் சேவைகளை மக்கள் இலகுவாக பெற்றுக் கொள்வதற்கும் வரிகள் மற்றும் சேவைக் கட்டணங்களை அசௌகரியம் எதுவுமின்றி இலகுவாகவும் விரைவாகவும் செலுத்துவதற்குமான வசதிகள் கொண்டதாக டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட முகப்பு அலுவலகம் அமைக்கப்பட்டு வருகிறது என்று கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்–

கடந்த காலங்களில் மக்கள் செலுத்திய வரிப்பணங்கள் மற்றும் சேவைக் கட்டணங்கள் சிலரால் கையாடல் செய்யப்பட்ட துரதிஷ்டமான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதனால் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனம் ஏற்பட்டு இருந்தது.

இது களையப்பட்டு, இக்கொடுப்பனவுகள் ஒழுங்கு முறையாக அறவீடு செய்யப்பட்டு, முகாமைத்துவம் செய்யப்படவேண்டும்என்பதுஎமதுநோக்கம். அவற்றைக் கொண்டு மக்களுக்கு வினைத்திறன் மிக்க சேவைகள் வழங்குவதற்கும் தற்போதைய மாநகர சபை நிர்வாகம் திடசங்கற்பம் பூண்டிருக்கிறது.

கல்முனை மாநகர சபையில் இவ்வாறான முகப்பு அலுவலக முறைமை செயற்படுத்தப்படாமையே கடந்த காலங்களில் நிதி மோசடிகளும் முறைகேடுகளும் இடம்பெறுவதற்கு காரணமாக அமைந்திருந்தது.


இக்குறைபாட்டை நிவர்த்தி செய்து, வரி அறவீடுகளை ஒழுங்கு முறைப்படுத்துவதை இலக்காகக் கொண்டே எமது மாநகர சபையிலும் முகப்பு அலுவலகத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதுவொரு புதிய விடயம் அல்ல என்கிற போதிலும் எமது மாநகர சபைக்கு இதுவொரு புத்தாக்க முயற்சியாகும்.

இதற்கென விஷேட செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது. அரச அங்கீகாரம் பெற்ற வயம்ப அபிவிருத்தி அதிகார சபை எனும் நிறுவனம் இச்செயலியை வடிவமைத்துள்ளது. வங்கி முறைமையை ஒத்ததாக இந்தச் சேவை அமையப்பெறவுள்ளது. வங்கி அட்டை மூலமும் ஒன்லைன் மூலமாக வீட்டில் இருந்தவாறும் மக்கள் தமது கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான வசதிகளைக் கொண்டதாக இது வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

தனிப்பட்ட முறையில் எவரும் நிதிக் கையாடலில் ஈடுபட முடியாதவாறு மிக நம்பகமானதும் பாதுகாப்பு மிக்கதாகவும் இச்செயலி அமையப் பெற்றிருக்கிறது. இந்த முகப்பு அலுவலகத்தில் மக்கள் குறைகேள் பிரிவும் செயற்படவுள்ளது. அத்துடன் மக்கள் தமது முறைப்பாடுகளை வீட்டில் இருந்தவாறு மேற்கொள்வதற்கும் தீர்வுகளை அறிந்து கொள்வதற்குமான செயலி ஒன்றையும் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

– என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# பெண்ணின் சடலம் மீட்பு சந்தேகத்தில் ஒருவர் கைது!



ஹக்மீமன, ஹியர் பிரதேசத்தில் வீடொன்றில் மர்மமான முறையில் உயிரிழந்த பெண்ணொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் 47 வயதான சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர் நேற்றுக் காலை வேயங்கொட பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளார்.

சந்தேக நபர் கடந்த 04 ஆம் திகதி இரவு பெண் தங்கியிருந்த வீட்டுக்குள் நுழைந்து வன்புணர்வு செய்த பின்னர் கழுத்தை நெரித்து கொலை செய்துள்ளார் என்றும் சந்தேகநபர் பெண்ணிடம் இருந்த நகைகள் மற்றும் இரண்டு கைத்தொலைபேசிகளையும் திருடியுள்ளார் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# ஆயுதங்களைக் காட்டி மிரட்டி கொள்ளையடிக்கப்பட்ட வாகனம்

கொழும்பு, ஒக.07

இரத்தினபுரி – அயகம பகுதியில் ஆயுதங்களைக் காட்டி மிரட்டி வாகனமொன்று கொள்ளையடித்து செல்லப்பட்ட சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

அயகம, தேயிலை கொலனி – பொகஹவன்குவா பிரதேசத்தில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சனிக்கிழமை (05) இரவு வாடகைக்கு செல்வதாக கூறி காரொன்றை இடைமறித்து இருவர் வாகனத்தில் ஏறியுள்ளனர்.

இதன்போது காரில் சென்றவர்கள் சாரதிக்கு தயிர் கொடுத்துள்ளனர். அதனை பருக சாரதி மறுத்ததால் வலுக்கட்டாயமாக குடிக்க கொடுத்துள்ளனர்.

இதன்பின்னர் சாரதியை ஆயுதங்களைக் காட்டி மிரட்டி காரில் இருந்து இறக்கிவிட்டு துப்பாக்கி முனையில் வாகனத்தை கடத்திச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அயகம பொலிஸாருக்குக் கிடைத்த தகவலகளின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் சாரதியின் பணப்பையையும் எடுத்துச்சென்றுள்ளனர். சந்தேகநபர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை என்றும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பீரிஸ் ஒலிக்கும் அபாயச் சங்கு

நாட்டின் மிகப்பெரிய பின்னடைவு நிலைமை குறித்து - பாதிப்பு அம்சம் பற்றி - விசனத்துடன் சுட்டிக்காட்டி இருக்கின்றார் முன்னாள் அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல்.பிரீஸ்.

எப்போதுமே குழப்பகரமான அரசியல் நிலைப்பாட்டில் இருந்து கொண்டு, குசும்புத்தனமாகப் பேசி வரும் அவர், இப்போதுதான் பேராசிரியருக்குரிய அறிவு முதிர்வு நிலையில் இருந்து, நாட்டின் மிகப் பிரதானமான பாதிப்பு விடயம் ஒன்றை நுணுக்கமான அவதானிப்புடன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியின் மிக மோசமான பெறுபேறு அல்லது விளைவு மூளைசாலிகள் - அறிவுஜீவிகள் - நிபுணத்துவ ஆளுமையாளர்கள் - நாட்டை விட்டு வெளியேறுவதுதான் என்று ஆதங்கத்துடன் குறிப்பிட்டிருக்கின்றார் அவர்.

பொருளாதார சீர்குலைவால் ஏற்படக்கூடிய மற்றைய பாதிப்புகளை விரைந்து நிவர்த்தி செய்து விட முடியும். திறமையான, ஆளுமை மிக்க, தீர்க்க தரிசனம் கொண்ட அரசாங்கம் ஒன்றினால் அந்தப் பிரச்சினைகளை வெற்றிகரமாகக் கையாண்டு நேர்சீர் செய்து விட முடியும். ஆனால் மூளைசாலிகளின் வெளியேற்றத்தால் ஏற்படப் போகும் பின்னடைவை - பாதிப்பை - நிவர்த்தி செய்வது என்பது சுலபமானதல்ல. அதற்குப் பெரும் விரயமும் நீண்ட காலமும் பிடிக்கும். அதன் பாதிப்புகள் நீண்ட காலத்துக்கு நீடிக்கும் என்பதும் மறுக்கப்படக் கூடியதல்ல.

30 ஆண்டுகால யுத்தத்தின் பின்னடைவுகள், கொவிட் தொற்றுப் பேரவலம் போன்றவற்றின் பாதிப்புகளில் இருந்து இலங்கை ஓரளவு மீண்டதாயின் அதற்குக் காரணம் அதன் உயர்ந்த மட்ட மனித வள ஆளுமைதான். இப்போது அதனையே மோசமாக இழந்து, அது வற்றி, வடிந்து போகும் நிலையில் நாடு எதிர்கொள்ளும் பின்னடைவுகளில் இருந்து இனி மீளுவது சுலபமானதல்ல என்று அவர் விசனிப்பதில் அர்த்தம் அதிகம் உண்டு.

நாட்டின் மிகப்பெரிய சொத்து நமது நிபுணத்துவ மூளைவளம்தான். பல்கலைக்கழக வள ஆளணியினர் மட்டுமல்லர், மருத்துவர்கள், தகவல் தொழில்நுட்பத் துறை சேர்ந்தோர், நிதி - வங்கித் துறையினர், கணக்காளர்கள் என்று நிபுணத்துவ வளம் விஞ்சி, மிஞ்சி நிலவிய நாடு நம்முடையது என்று அவர் கூறுவது பெருமிதம் கொள்ளத்தக்கதுதான்.

ஆனால், இந்த மூளைசாலிகள் இந்த நாட்டில் எதிர்காலம் இல்லை என்று கருதி, நாட்டை விட்டு அள்ளுப்பட்டு வெளியேறும் பேரவலம் ஏற்பட்டிருக்கின்றது என அவர் அபாயச் சங்கு ஒழிப்பதில் உண்மை உண்டு.


இந்த நிபுணத்துவ மூளைசாலிகள் நாட்டை விட்டு வெளியேறினால், அவர்கள் வெளிநாடுகளில் உழைத்து, அந்த நாடுகளின் பணத்தில் நம் நாட்டுக்குக் கொடுப்பனவுகளை அனுப்புவார்கள், அதனால் அந்நிய செலாவணி கிட்டும் என்று சிலர் கனவு காண்கின்றார்கள். அது அர்த்தமற்ற கனவு என்று பேராசிரியர் ஏளனம் செய்கிறார்.

"நான் 33 வருடங்களாகப் பல்கலைக்கழகங்களுடன் பயணித்தவன். இன்று உயர் கல்வி சார்ந்த பலருக்கும் வெளிநாட்டுக் கதவுகள் திறந்து இருக்கின்றன. அவர்களின் மன நிலையும் அத்திசையை நோக்கி மாறி வருகின்றது . அதன் விளைவு நாட்டுக்கு விபரீதமாக போகின்றது" - என்று எச்சரிக்கின்றார் அவர்.

இந்த எச்சரிக்கை சம்பந்தப்பட்ட யாருடைய காதிலாவது விழுமா என்பது கேள்விக்குறியே.

## வருடந்தோறும் வீதி விபத்துக்களால் ரூ. 120 கோடியை இழக்கும் இ. போ. ச.

### இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் தகவல்



வருடாந்தம் இலங்கை போக்குவரத்து சபைக்கு வீதி விபத்துக்களால் நூற்றி இருபது கோடி ரூபாவுக்கும் அதிகமான நஷ்டம் ஏற்படுகிறது என்று இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஐந்து வருடங்களில் ஏழாயிரத்துக்கும் அதிகமான பேருந்துகள் விபத்துக்குள்ளாகியுள்ளன. ஒரு வருடத்தில் ஆயிரத்து நானூறுக்கும் மேற்பட்ட பேருந்துகள் விபத்திற்குள்ளாகியுள்ளன.

இவ்வாறு விபத்துக்குள்ளாகும் பேருந்துகளைச் சரிசெய்து, இயக்குவதற்கு சுமார் நாற்பத்தேழு கோடி ரூபாவும், சட்டச் சிக்கல்களுக்கு எண்பது கோடி ரூபாவும் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகவே வீதி பாதுகாப்பு விபத்து தடுப்பு திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் பிரகாரம், மேல்மாகாண டிப்போக்களுடன் இணைக்கப்பட்டுள்ள அறுநூறு லங்காம சாரதிகள் பயிற்சித் திட்டத்துக்கு அனுப்பப்பட உள்ளனர்.

பேருந்து சாரதிகள் விபத்து பதிவு புத்தகத்தை பேணுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துக் குற்றங்களில் சிக்கிய சாரதிகளும் அந்தந்த பிழைகள் பற்றி புத்தகத்தில் குறிப்புகள் செய்ய வேண்டும்.

இதன் அடிப்படையில் பதவி உயர்வுக்கான இந்த வேலைத் திட்டத்தின் மூலம் வாகன விபத்துக்கள் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மக்கள் தாங்க முடியாத அளவுக்கு உணவுப் பொருள்களின் விலைகள்

### 128 வீதத்தால் அதிகரித்துள்ளன என்கிறார் பேராதனை பேராசிரியர்

கொழும்பு, ஓக.07

மக்களால் தாங்க முடியாத அளவுக்கு உணவுப் பொருள்களின் விலை 128 வீதத்தால் அதிகரித்துள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிவரவியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

பணவீக்கம் தொடர்பில் சனத்தொகை புள்ளிவிவர திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அண்மைய அறிக்கைகளில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

உணவு அல்லாத பொருள்களின் விலை மட்டம் 87 வீதத்தால் அதிகரித்துள்ளது என்று பேராசிரியர் தெரிவித்தார்.

நுகர்வோர் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலை மட்டத்தில் சராசரியாக நூற்றுக்கு மூன்று வீத அதிகரிப்பு காணப்படுகிறது.

கொழும்பு நகர எல்லையில் உணவுப் பொருட்களின் விலை 136 வீதத்தால் அதிகரித்துள்ளது. மக்களின் வருமானத்தின் உறுதியான பெறுமதி குறைந்துள்ளது என்றும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

2019ஆம் ஆணடுக்குப் பின்னர் அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படாததன் காரணமாக மக்களின் கொள்வனவு செய்யும் சக்தி வெகுவாகக் குறைந்துள்ளது என்று வசந்த அத்துகோரள மேலும் தெரிவித்துள்ளார்.



# ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்குகள் இரண்டு வாரங்களுக்குள் தடை செய்யப்படும்

## சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவிப்பு

ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் சில பிளாஸ்டிக் பொருள்கள், பிளாஸ்டிக் மாலைகள், ஒருமுறை பயன்படுத்தும் கரண்டிகள், முள்கரண்டிகள், தயிர், ஐஸ்கிரீம் கரண்டிகள், பிளாஸ்டிக் ஸ்ட்ரோக்கள், மற்றும் பிளாஸ்டிக் இடியப்பத் தட்டுகள் ஆகியவை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் தடை செய்யப்படும்.

2023 ஆம் ஆண்டுக்கான ஐ.நா. காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டின் 28 ஆவது கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்–

பாதிக்கப்படக் கூடிய மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான காலநிலை நியாய மாற்றத்தை இலங்கை ஆரம்பிக்கத் தயாராக உள்ளது.

காலநிலை நீதியை உறுதிப்படுத்துதல், இழப்புகள் மற்றும் சேதங்களுக்கு நிதியளிப்பதை துரிதப்படுத்துவதற்கு பாரம்பரியமற்ற மாற்று அணுகுமுறையை பேணும் பொதுவான நோக்கத்துடன், காலநிலை நியாய மன்றம் ஒன்றை நிறுவுவதற்கு இலங்கை முன்மொழிந்துள்ளது.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் ஏற்படும் சுற்றுச் சூழல் பிரச்சினைகளைகளுக்கு முன்னுரிமை அளித்து கலந்துரையாட அரசு, அரசு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் பிற தரப்பினர்களுக்கு தளத்தை வழங்கும் நோக்குடன் இதற்குரிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளளது.

தம்புள்ளை மற்றும் ஹிரிவடுன்ன ஆகியவற்றை சுற்றுச்சூழல் சுற்றுலாத் தலங்களாக அபிவிருத்தி செய்வது குறித்து அரசு கவனம் செலுத்தி வருகிறது.



ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் சில பிளாஸ்டிக் பொருள்கள், பிளாஸ்டிக் மாலைகள், ஒருமுறை பயன்படுத்தும் கரண்டிகள், முள்கரண்டிகள், தயிர், ஐஸ்கிரீம் கரண்டிகள், பிளாஸ்டிக் ஸ்ட்ரோக்கள், மற்றும் பிளாஸ்டிக் இடியப்பத் தட்டுகள் ஆகியவை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் தடை செய்யப்படும்.

மத்திய சுற்றாடல் அதிகார சபை நாட்டின் காற்றின் தரப் பாதுகாப்பு நிலையை அறிக்கை அளிப்பதற்கான அவசரகால பதில் செயல் திட்டம் ஒன்றை ஏற்கனவே தயாரித்துள்ளது.

சுற்றாடல் அமைச்சு, மின்சாரம் மற்றும் இலத்திரனியல் கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கையை தயாரித்து வருகிறது.

புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம், கனிம போக்குவரத்தை முறைமைப்படுத்தும் இலக்குடன், வாகன எண் மற்றும் வழித்தட விவரங்களுடன் கனிமப் போக்குவரத்து அனுமதிப் பத்திரங்களை வழங்கத் தொடங்கியுள்ளது.

இந்த விவரங்கள் அனைத்தும் கணினியில் உருவாக்கப்பட்டவை. இது அனுமதி பெற்றவரால் விவரங்கள் மாற்றப்படுவதைத் தடுக்கிறது.

கனிமப்பொருட்களை சட்டவிரோதமாக கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் வாகனங்களை புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் தரவுத்தளக் கட்டமைப்பு மூலம் தடுப்புப்பட்டியலில் சேர்க்கும் நடைமுறையையும் அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

சுரங்கங்கள் மற்றும் கனிமச் சட்டத்தின் கீழ் ஒழுங்குமுறை திருத்தம் செய்யப்பட்டு, ஆய்வு அனுமதி நடைமுறைக்கு புதிய விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையில் உள்ள கனிம வளங்களில் முதலீட்டாளர்கள் நேரடியாக, தரகர்களின் தலையீடு இல்லாமல் முதலீடு செய்வதற்கு வசதியாக மேலும் புதிய ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அந்த முயற்சியை வெற்றியடையச் செய்வதற்காக, காலநிலை நியாய மன்றத்தை நிறுவுவதற்கான ஆதரவாளராக சுற்றாடல் அமைச்சு முன்வைத்த மூலோபாய திட்டத்தை செயல்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

தேசிய காலநிலை மாற்றக் கொள்கையை உருவாக்குதல், தேசிய கனிமக் கொள்கையை உருவாக்குதல், இலங்கைக்கான தேசிய குளிரூட்டும் கொள்கையை உருவாக்குதல் போன்ற பல்வேறு கொள்கைகளை தயாரிக்கும் பணி இந்த ஆண்டு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் முக்கிய நடவடிக்கைகளாகும்.

கழிவு முகாமைத்துவத்தின் கீழ் பிளாஸ்டிக் பயன்பாடு மற்றும் மீள் சுழற்சிக்கும் புதிய விதிகளை அறிமுகப்படுத்தியுள்ளோம். மத்திய சுற்றாடல் அதிகார சபை ஏற்கனவே விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு விதிகளை இதில் இணைத்துள்ளது.–என்று தெரிவித்தார்.

# கல்முனை, சம்மாந்துறை தொகுதிகளில் ஐ.தே.கட்சியின் ஒன்றுகூடல் நிகழ்வுகள்

(பாறுக் ஷிஹான்)

ஐக்கிய தேசிய கட்சியின் கல்முனைத் தொகுதி செயற்பாட்டாளர்கள் மற்றும் மக்கள் சந்திப்பு ஞாயிற்றுக்கிழமை (06) அல்பஹ்ரியா மகா வித்தியாலய மண்டபத்திலும் நடைபெற்றது.








இந்த நிகழ்வுகளில் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பாலித ரங்கே பண்டார, முன்னாள் அமைச்சர் தயா கமகே, முன்னாள் பிரதி அமைச்சர் அனோமா கமகே, முன்னாள் உயர் கல்வி பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபா, ஐக்கிய தேசிய கட்சியின் கல்முனை மற்றும் சம்மாந்துறை தொகுதிகளுக்கான அதிகாரமளிக்கப்பட்ட முகவரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் குழுத் தலைவருமான ஏ.எம்.ஜெமீல், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எச்.எச்.எம் நபார், அம்பாறை மாவட்ட ஓய்வு பெற்ற சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த ரட்னாயக்க உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

சம்மாந்துறை தொகுதி செயற்பாட்டாளர்கள் மற்றும் மக்கள் சந்திப்பு கடந்த சனிக்கிழமை (05) அப்துல் மஜீட் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுகளில் கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது நாடு பூராகவும் கட்சி புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் சம்மாந்துறை மற்றும் கல்முனை தொகுதியிலும் கட்சி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

கட்சியைப் பலப்படுத்துதல் எனும் தொனிப்பொருளில் தற்போது ஐக்கிய தேசிய கட்சி தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் கட்சிக்கான ஆதரவு கோரும் நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

# பனங்காடு அக்னி விளையாட்டுக் கழக உறுப்பினர்களுக்கு சீருடை வழங்கல்




(நூருல் ஹுதா உமர்)

பனங்காடு அக்னி விளையாட்டு கழக உறுப்பினர்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்வு அக்னி விளையாட்டு கழகத்தின் செயற்குழு உறுப்பினர் ரவீந்திரன் வினோஜன் தலைமையில் நேற்று (06) பனங்காடு விளையாட்டு மைதான கட்டித்தில் இடம்பெற்றது.

ஆலையடிவேம்பு பிரதேசத்தில் தனக்கென ஒரு இடத்தை வைத்துக் கொள்ளும் கழகமாகவும், பல சமூக, சமய செயற்பாடுகளில் அக்கறை காட்டும் கழகமாகவும் பனங்காடு அக்னி விளையாட்டு கழகம் திகழ்கின்றது.

இவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக இளையதம்பி ரவிராஜ் அவர்களின் நிதி பங்களிப்பில் இளையதம்பி கவிராஜ் இணைந்த கரங்கள் அமைப்பின் ஊடாக இந்தச் சீருடைகளை வழங்கினார்.

நிகழ்வில் விளையாட்டு கழகத்தின் ஆலோசகர் ரமேஸ், கழக இயன் மருத்துவர் ரா. கரன், ஆலையடிவேம்பு விளையாட்டு உத்தியோகத்தர் நிஷாந்தன், ஆசிரியர் வாசன், மனோராஜ் இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான சுரேஷ், காந்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மாணவன் துஷ்பிரயோகம்: ஆசிரியர் பொலிஸில் சரண்!

அரச பாடசாலை ஒன்றில் மாணவன் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபரான உடற்கல்வி ஆசிரியர் நிந்தவூர் பொலிஸில் சரணடைந்துள்ளார்.

தலைமறைவாகி இருந்த சந்தேக நபரான உடற்கல்வி ஆசிரியரை பொலிஸார் தேடி வந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (06) மாலை தனது சட்டத்தரணி ஊடாக பொலிஸில் சரணடைந்துள்ளார்.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைக்காக ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ. எம் .நஜீம் உறுதிப்படுத்தியுள்ளார்.

கடந்த 2 ஆம் திகதி பாடசாலை ஒன்றில் பாலியல் துஷ்பிரயோகததுக்கு உள்ளாகி மாணவன் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் சந்தேக நபரான ஆசிரியர் தலைமைறைவாகி இருந்தார்.

சந்தேக நபரான ஆசிரியர் அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பகுதியில் உள்ள பிரபல அரச பாடசாலை ஒன்றில் உடற்கல்வி ஆசிரியராக உள்ளார்.

சம்பவம் தொடர்பில் நிந்தவூர் பொலிஸார் பாதிக்கப்பட்டுள்ள தரம் 9 வகுப்பில் கல்வி கற்கும் மாணவனிடம் வாக்கு மூலம் பெற்றுள்ளனர்.

# சுகாதார பராமரிப்பு நிலையங்களில் கழிவு முகாமைத்துவ முயற்சி

## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை நடவடிக்கை










(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் றிபாஸின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக கல்முனை பிராந்திய பொது சுகாதார பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஏ.எம் ஹில்மி வைத்தியசாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பான கலந்தாலோசனைக் கூட்டம் சுகாதார பணிமனையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சார்பில் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பி.ஏ வாஜித் தலைமையில இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் பிரிவு தலைவர்கள், வைத்திய அத்தியட்சகர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பிரதேச வைத்திய அதிகாரிகள் மற்றும் பொறுப்பு வைத்திய அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது கல்முனை பிராந்தியத்தில் அரச மற்றும் தனியார் வைத்திய சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி குறித்த திட்டத்தை விரிவுபடுத்தி அதன் ஊடாக பொறுப்பு வாய்ந்த முறைமை ஒன்றை கட்டியெழுப்புவது தொடர்பில் பேசப்பட்டது.

அது தொடர்பான வழிகாட்டல் மற்றும் சுகாதார உதவிகளை பொது சுகாதார பிரிவின் ஊடாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் குறித்து கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அவர்களின் கருத்திட்டத்துக்கு அமைவாக உருவாக்கப்பட்ட வள முகாமைத்துவம் செயற்றிட்டத்தின் கீழ் பெறப்பட்ட உபகரணங்கள் இதற்கென விசேடமாக பயன்படுத்தப்பட உள்ளன.

விரைவில் இக்கழிவுகளை அகற்றும் செயல் முறையை மேற்பார்வை செய்வதற்கென கள விஜயம் ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் வெற்றிகரமான இத்திட்டத்தை ஏனைய பிராந்தியங்களிலும் எதிர்காலத்தில் நடைமுறைப் படுத்த உள்ளானர் என்று மாகாண சுகாதார சேவைகள் பணிமனையினர் தெரிவித்துள்ளனர்.

# கிணற்றில் தவறி விழுந்த 6 வயது சிறுவன் பலி!

மட்டக்களப்பில் கிணற்றில் தவறி விழுந்து 6 வயது சிறுவன் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு - போரதீவுப்பற்று பிரதேசத்தில் நேற்று (06) மாலை இடம்பெற்றுள்ளது.

அருணாசலம் சிவரூபன் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுவன் தாயாருடன் குளித்துக் கொண்டிருந்தபோதே கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்துநுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park

# கருணாநிதியின் 5 ஆம் ஆண்டு நினைவாக ஸ்டாலின் தலைமையில் அமைதிப் பேரணி!

முன்னாள் தமிழக முதல்வர் கருணாநிதியின் 5 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சென்னையில் தமிழக முதல்வர் ஸ்டாலின் தலைமையில் தி.மு.கவினர் அமைதிப் பேரணி மேற்கொண்டனர்.

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள கருணாநிதி சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்திய முதல்வர் மு.க. ஸ்டாலின், பின்னர் அங்கிருந்து பேரணியை தொடங்கினார்.

முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான இந்த பேரணியில் தமிழக அமைச்சர்கள் துரைமுருகன், நேரு, பொன்முடி, எ.வ.வேலு, உதயநிதி ஸ்டாலின், மஸ்தான், தங்கம் தென்னரசு, சேகர் பாபு உள்ளிட்டோர் பங்கேற்றனர். மக்களவை உறுப்பினர் டி.ஆர்.பாலு, தயாநிதி மாறன், கனிமொழி உட்பட தி.மு.க. அமைச்சர்கள், மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தி.மு.க மூத்த நிர்வாகிகள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.



# ராகுல் காந்தியைக் கண்டு பா.ஜ.க. அஞ்சுகிறதா?

## முதல்வர் மு.க. ஸ்டாலின் கேள்வி



காங்கிரஸ் கட்சியில் முன்னாள் தலைவர் ராகுல் காந்தியைக் கண்டு பா.ஜ.க. அஞ்சுகிறதா என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி எழுப்பி உள்ளார்.

அவதூறு வழக்கில் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து சூரத் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதையடுத்து ராகுல் காந்தியின் எம்.பி. பதவி பறிக்கப்பட்டது. இந்தத் தீர்ப்புக்கு எதிரான மேல்முறையீட்டு வழக்கில், தண்டனையை நிறுத்தி வைத்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

எனினும், அவரது எம்.பி. பதவி நீக்கம் திரும்பப் பெறப்படவில்லை. இதற்கு கண்டனம் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது டுவிட்டர் பதிவில் கருத்து தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் குறிப்பிடுகையில், காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட தண்டனையை உச்ச நீதிமன்றம் நிறுத்திவைத்த பிறகும், அவரது எம்.பி. பதவி நீக்கத்தை ஏன் திரும்ப பெறவில்லை? அவரைத் தகுதி நீக்கம் செய்யும்போது காட்டப்பட்ட அவசரம், இப்போது எங்கே போனது?

நாடாளுமன்றத்தில் சகோதரர் ராகுல் காந்தியின் இருப்பைக் கண்டு பா.ஜ.க. அஞ்சுகிறதா? என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# ராகுல் காந்தி குற்றவாளிதான்: பா.ஜ.க. எம்.பி!

சிறைத்தண்டனை நிறுத்தப்பட்டாலும் சட்டத்தின் பார்வையில் ராகுல் காந்தி இன்னும் குற்றவாளிதான் என்று பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் மகேஷ் ஜேத்மலானி தெரிவித்துள்ளார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, கர்நாடகாவில் நடந்த தேர்தல் பிரச்சாரத்தின்போது 'மோடி' என்ற சமூகத்தின் பெயர் குறித்து அவதூறான கருத்தை தெரிவித்ததாகக் கூறி, பாஜக எம்எல்ஏ புர்னேஷ் மோடி என்பவர் சூரத் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கில் ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதால் அவரது சட்டமன்ற உறுப்பினர் பதவி தகுதியிழப்புச் செய்யப்பட்டது. இந்நிலையில் இதை எதிர்த்து தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், ராகுல் காந்தியின் 2 ஆண்டு தண்டனையை நிறுத்தி வைத்துள்ளது.

இதன் மூலம் ராகுல் காந்தி தனது பதவியை திரும்ப பெறுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் சட்டத்தின் பார்வையில் ராகுல் காந்தி இன்னும் குற்றவாளிதான் என்று புர்னேஷ் மோடி தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞரும், மாநிலங்களவை பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினருமான மகேஷ் ஜேத்மலானி தெரிவித்துள்ளார்.

# தீவிரமடையும் உக்ரைன், ரஷ்ய போர் : இரவிரவாகத் தாக்குதல்: பலர் உயிரிழப்பு!

கருங்கடலில் ரஷ்ய கொள்கலன் மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து ரஷ்ய மற்றும் உக்ரைனிய படைகள் தங்கள் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளன.

ஒரே இரவில் தீவிர வான்வழி தாக்குதல்கள் மற்றும் ஏவுகணை தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதன்போது மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

சவுதி அரேபியாவில் உக்ரைனில் போரை எப்படி முடிவுக்கு கொண்டுவருவது என்பது குறித்து, சீனா,இந்தியா மற்றும் அமெரிக்கா உட்பட 40 நாடுகளின் மூத்த அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்திய நிலையில் சனிக்கிழமை மாலை இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, கிழக்கு நகரமான குபின்ஸ்க்கில் இடம்பெற்ற இரத்த மையத்தின் மீதான தாக்குதலுக்கு உக்ரைனிய அதிகாரிகள் ரஷ்யாவை



குற்றம் சாட்டியுள்ளனர்.

அதே நேரத்தில் மாஸ்கோவில் கடமையிலுள்ள அதிகாரிகள் ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் ஷெல் தாக்குதல் நடத்தினர் என்று குற்றம் சாட்டினார்கள்.

கார்கிவ் பிராந்தியத்தில் உள்ள குபியன்ஸ்க் மீதான தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர் மற்றும் நான்கு பேர் காயமடைந்தனர் என்று உள்ளூர் பிராந்திய இராணுவ நிர்வாகத்தின் தலைவர் ஓலே சினிஹுபோவ் தெரிவித்துள்ளார்.

## காலக்கெடுவை உதாசீனம் செய்தது நைஜர்!

பதவியிலிருந்து அகற்றப்பட்ட ஜனாதிபதியிடம் மீண்டும் அதிகாரத்தை ஒப்படைப்பதற்கான மேற்கு ஆபிரிக்க நாடுகளின் காலக்கெடுவை நிராகரித்துள்ள நைஜரின் இராணுவதலைவர்கள் தங்கள் வான்பரப்பை மூடியுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார சமூகத்திடமிருந்து அச்சுறுத்தல்உள்ளதாகதெரிவித்துள்ள இராணுவ ஆட்சியாளர்களின் அதிகாரியொருவர் வான்வெளியை மூடுவது குறித்து அறிவித்துள்ளார்.

இராணுவீரதியில் தலையிடுவதற்கு இரண்டு மத்திய ஆபிரிக்க நாடுகளில் படையினர் தயார் நிலையில் உள்ளனர் என இராணுவஆட்சியாளர்களின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அயல்நாடுகள் தயாராகும் விதத்திலிருந்து பெரும் தலையீடு இடம்பெறப்போவது உறுதியாகின்றது இதன் காரணமாக ஞாயிற்றுகிழமை முதல் நைஜரின் வான்வெளி மூடப்படும் என அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

நைஜரின் இராணுவத்தினரும் எங்கள் பாதுகாப்பு படையினரும் எங்கள் மக்களின் ஆதரவுடன் எங்கள் பிரதேசத்தின் ஆள்புல ஒருமைப்பாட்டினை காப்பாற்றுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தெற்காசியாவில் அதிக வெப்பநிலை: 76 வீதமான சிறார்களுக்குப் பாதிப்பு!

யுனிசெவ்ப் மதிப்பாய்வின்படி, ஏனைய அனைத்துப் பிராந்தியங்களுடன் ஒப்பிடும்போது, தெற்காசியாவில் 76 சத வீதமான சிறார்கள் அதிக வெப்பநிலை தாக்கத்துக்கு உள்ளாகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தெற்காசியாவில் 18 வயதுக்குட்பட்ட சுமார் 460 மில்லியன் சிறார்கள் அதிக வெப்பத் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக தெற்காசியாவில் 4 சிறார்களில் 3 பேர் ஏற்கனவே அதிக வெப்ப நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

உலகளவில் ஜூலை மாதம் இதுவரையில் பதிவு செய்யப்பட்ட அதிக வெப்பமான மாதமாகும்.

தெற்காசியாவில் உள்ள நாடுகள் தற்போது உலகில் அதிக வெப்பமானவை அல்ல, ஆனால் தெற்காசியாவில் நிலவும் வெப்பம், மில்லியன் கணக்கான பாதிக்கப்படக் கூடிய சிறார்களின் உயிருக்கு ஆபத்தான அபாயங்களைக் கொண்டுவருவதாக யுனிசெவ்ப் நிறுவனத்தின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## புலம்பெயர்ந்தோர் படகு கடலில் மூழ்கியதில் நான்கு பேர் உயிரிழப்பு!

துனிசியாவின் கெர்கென்னா தீவில் புலம்பெயர்ந்தோர் படகு கடலில் மூழ்கியதில் நான்கு பேர் உயிரிழந்தனர்.


அத்துடன், 50 இற்கும் அதிகமானோரைக் காணவில்லை என அந்த நாட்டின் நீதித்துறை சார்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார் என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

துனிசிய கடலோர காவல்படை இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை மாதம் 20 ஆம்திகதி வரை கடலில் மூழ்கிய 901 பேரின் உடலங்களை மீட்டுள்ளனர் என்று அந்த நாட்டின் உள்துறை அமைச்சர் கடந்த மாதம் குறிப்பிட்டிருந்தார்.



வட ஆபிரிக்கா நாடான துனிசியா இந்த ஆண்டு வரலாறு காணாத புலம்பெயர்தோரின் உயிரிழப்புகளை சந்தித்துள்ளது.

ஆப்பிரிக்காவில் இருந்து இத்தாலிய கடற்கரைக்கு செல்லும் புலம்பெயர்ந்தோரின் படகுகள் அடிக்கடி கடலில் விபத்துக்குள்ளாகின்றமை குறிப்பிடத்தக்கது.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949